எடுக்கப்படும். அதைப்போல, இராமநாதபுரம் மாவட்டத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். ஆகவே, எந்தத் திட்டத்தில் செயல்படுத்தமுடியும் என்பதை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், நீங்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுவோர் பட்டியலில் இருக்கிறீர்கள். அப்போது சந்திக்கலாம்; உட்காருங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கையில் சந்திக்கலாம். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் வேண்டாம்; போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கொடுத்துவிட்டேன்.*

முற்பகல் 10–20

வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

97—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***3127—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.*

திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூரிய கண்கள், சீரிய நெறிகள் சிந்தும் திருமகள், மாசற்ற இலட்சியத்தை விரும்பி வாழும் மாதரசி, சுறுசுறுப்பிற்கு இலக்கணமாய் விளங்குகின்ற தூயவர், (மேசையைத் தட்டும் ஒலி) தெருவோர ஏழைகளுக்கு ஆலயத்தில் சோறுபோட்டு ஆண்டவன் வகுத்த நான்மறையும் வாழ்த்த தினந்தோறும் உழைக்கின்ற உத்தமத் தலைவி, வாட வைக்கின்ற துன்பம், வல்லூராய் பகைமை, இக்கெட்டையெல்லாம் மூட்டைக் கட்டி கிடப்பிலே போட்டு, கிளர்ந்தெழுந்திட்ட சிங்கத் தலைவி, அஞ்சாமை குணத்தோடு அநியாயம் எதிர்ப்பதற்கே வெகுண்டெழுந்த தலைவி, "தமிழகத்தில் இல்லாரே இல்லை" என்ற நிலையை எய்த, தொய்வின்றி உழைக்கின்ற உத்தமத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, எனது வினாவினைத் தொடுக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதியானது, ஏழையெளிய விவசாயப் பெருமக்கள் அதிக அளவில் வாழக்கூடிய ஒரு பகுதி. ஏழையெளிய மக்களுக்கும், விவசாயப் பெருமக்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும், எண்ணற்ற நலத் திட்டங்களை வாரி வழங்கி, கடந்த ஐந்து ஆண்டுகளில் 67 கல்லூரிகளை நிறுவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் ஒரு கல்விப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது தொகுதியானது, வடக்கே வளையப்பட்டி என்ற ஒரு கிராமம் வரை இருக்கின்றது. அது சோழவந்தானிலிருந்து சுமார் 35 கி.மீ. தொலைவில் உள்ளது; மேற்கே நிலக்கோட்டை வரை இந்தத் தொகுதி விரிந்துள்ளது; தெற்கே செக்காணூரணி வரை விரிந்துள்ளது; கிழக்கே எடுத்துக்கொண்டோமேயானால், ஊமச்சிக்குளம் வரை இருக்கின்றது. இந்த அடிப்படையிலே வாடிப்பட்டியை மையமாக வைத்துப் பார்க்க வேண்டுமென்றால், எங்களுடைய தொகுதியைச் சுற்றி சுமார் 60 கி.மீ. சுற்றளவிற்கு எந்தக் கல்லூரியும் கிடையாது. எனவே, அங்கே பயிலக்கூடிய மாணவர்கள், உயர் கல்வி கற்க வேண்டுமென்றால், 60 கி.மீ. தூரத்திற்குச் சென்று கல்வி கற்க வேண்டிய நிலையிருப்பதால்,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, கருணைகூர்ந்து சோழவந்தான் தொகுதியின் மையப் பகுதியான வாடிப்பட்டி என்ற இடத்தில், ஓர் அரசுக் கலைக் கல்லூரியோ அல்லது பொறியியல் கல்லூரியோ அல்லது பாலிடெக்னிக் கல்லூரியோ அமைத்துத் தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல, சோழவந்தான் தொகுதி அமைந்துள்ள மதுரை மாவட்டத்தில், ஏற்கெனவே 5 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், ஓர் அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரி ஓர் உணவு மேலாண்மைப் பயிலகம் மற்றும் 11 சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் என, மொத்தம் 18 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, கடந்த 2011–2016 ஆட்சிக் காலத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிய 67 கல்லூரிகளிலே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கிற மாவட்டத்தை மட்டும் எடுத்துக்கொண்டோமென்றால், 2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், சோழவந்தானுக்கு அருகில் 12 கி.மீ. தொலைவிலுள்ள செக்காணூரணி மற்றும் 33 கி.மீ. தொலைவிலுள்ள உசிலம்பட்டி ஆகிய இடங்களில் இரண்டு புதிய அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை வழங்கிய பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். கல்லூரிகளை வழங்கியதோடு மட்டுமல்லாமல், மாணாக்கர்களுடைய சேர்க்கைக்கும், அதற்கு இட வசதி தேவை என்பதைக் கருத்தில்கொண்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த இரண்டு கல்லூரிகளுக்கும் இடத்தைத் தேர்வு செய்து, கட்டடம் கட்டுவதற்கு நிதியும் ஒதுக்கீடு செய்து, கட்டடப் பணிகள் முடிவடைந்து, 12–6–2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து

2016 ஆகஸ்ட் 23]

வைக்கப்பட்டு, இன்றைக்கு அந்தக் கல்லூரிகள் இரண்டும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்தவகையில், அந்த மாவட்டத்திலுள்ள 5 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் ஓர் அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்த்துப் பார்க்கின்றபொழுது, அந்த மாவட்டத்தில் 6,765 மாணவ, மாணவியர் பயிலும் வகையிலே, சேர்க்கை இடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அதில் 3,939 இடங்கள் மட்டுமே பூர்த்தியடைந்துள்ளன. 2015–2016–லே பார்க்கின்றபொழுது, 2,826 மாணவர்கள் சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகவில்லை. அதேபோல, 2016–2017–லே பார்க்கின்றபொழுது, 6,765 மாணாக்கர்கள் பயிலும் அந்த இடத்திலே, 3,591 இடங்கள் மட்டுமே பூர்த்தியடைந்துள்ளன; 3,174 மாணவர்கள் சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அல்லது பொறியியல் கல்லூரியில் ஏதேனும் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அதைப் பார்க்கின்றபோது, இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 17 அரசு உதவிபெறும் கல்லூரிகளும் அங்கே இருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிய 67 கல்லூரிகளிலே, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்று கடந்த 2011–2016 ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கே மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல், கல்லூரிகள் இருக்கின்றன. வரக்கூடிய காலங்களில், மாணவர்களின் எண்ணிக்கை கூடுகின்றபட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து, அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.*

திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணையான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும்*

என அறிவித்திருப்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றி கூறி அமருகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழையும், தமிழனையும் காக்கின்ற தலைவியே! குடிமக்கள் மனம் குளிர மக்களாட்சி காண்கின்ற அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) "நின் கொடி வாழ்க! படை வாழ்க" என்று தமிழக மக்கள் அனுதினமும் போற்றும் எங்கள் அன்னையை வணங்குகிறேன்.

குடியாத்தம் தொகுதியிலே ஒரு கல்லூரிகூட இல்லாத நிலை இருக்கின்றது. எங்களுடைய குடியாத்தம் தொகுதியில் அரவட்லா, மோர்தானா போன்ற மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதிகளில், இதுவரையில் ஒரு கலைக் கல்லூரியோ, தொழில்நுட்பக் கல்லூரியோ, எந்தவிதக் கல்லூரியோ இல்லாத காரணத்தால், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர் அதிகம் வாழக்கூடிய இந்தத் தொகுதியில், ஒரு மகளிர் கலைக் கல்லூரியோ அல்லது கலை மற்றும் அறிவியல் கல்லூரியோ, ஏதாவது ஒரு கல்லூரியை அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மாணவச் செல்வங்கள் உயர் கல்வி பெறுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் கல்வியின் தரம் உயர்ந்துள்ளது; மாணவர்களுடைய திறன் வளர்ச்சி அடைந்துள்ளது. ஆகையால், எங்களுடைய தொகுதியின் நீண்ட நாள் கோரிக்கையான ஒரு கல்லூரியை வரும் ஆண்டுகளில் அமைத்துக் கொடுத்தால், அது நிச்சயமாக நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கே.வி. குப்பத்தில் இருக்கக்கூடிய ஓர் அரசு கலைக் கல்லூரியில் 2,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டும், வெறும் 900 மாணவர்கள் மட்டுமே சேரக்கூடிய அளவிற்கு சேர்க்கை இடங்கள் உள்ளன. மீதம் உள்ள மாணவர்கள் எல்லாம் அருகிலுள்ள தொகுதிகளுக்குச் சென்று, தனியார் கல்லூரிகளில் சேர்ந்தும், சிறுபான்மையின பெண்கள் எல்லாம் வெளியூர்களுக்குச் சென்றும் படிக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது.

2016 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: ஆகையால், அவர்கள் எல்லாம் சேர்ந்து படிக்கக்கூடிய அளவில் கல்லூரி ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அமைத்துக் கொடுத்தால், மாணவச் செல்வங்கள் உயர் கல்வியைப் பெற சிறப்பான ஒரு வாய்ப்பாக அது அமையும்; மக்களுக்கும் ஒரு பெரிய பேராதரவு கொடுத்ததாக இருக்கும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய வேலூர் மாவட்டத்தில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மூன்றும், அரசு உதவிபெறும் கல்லூரிகள் ஏழும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதேபோல், பலவகை தொழில்நுட்பக் கல்லூரியாக அரசுக் கல்லூரி ஒன்றும், அரசு உதவிபெறும் கல்லூரி ஒன்றும் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றபட்சத்தில்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011–2016 ஆம் ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்ட 67 கல்லூரிகளிலே, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என்ற வகையில், அவர் சார்ந்திருக்கின்ற மாவட்டத்திற்கு இரண்டு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும், அரசுக் கல்லூரிகளாக அங்கே வழங்கப்பட்டு, மாணவர்களுடைய சேர்க்கையைப் பூர்த்தி செய்கின்றவகையில், அவை அமைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

இன்றைக்குக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்களைக் கூடுதலாக சேர்க்கின்ற வகையில், அரசுக் கல்லூரிகளில் 20% மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதற்காகவும், அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 15% மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதற்கும், தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் 10% மாணவர்களைச் சேர்க்கின்ற வகையிலும், மாண்புமிகு அம்மா

அவர்களின் அரசானது உத்தரவிட்டதன் அடிப்படையில், இன்றைக்கு அதிக அளவில் மாணவர்கள் உயர் கல்வி பெறுகின்ற சூழல் உருவாகியிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாணாக்கர்களை எந்தவிதத்திலும் கைவிடாமல், அவர்களுக்குப் படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்ததன் காரணமாகத்தான், உயர் கல்வி சேர்க்கையில், இந்திய அளவிலே தமிழகமானது முதலிடத்தில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு ஒட்டுமொத்த மாணவர்களுடைய சேர்க்கையில் தமிழகம் முதலிடத்தில் இருந்தாலும்கூட, பெண்கள் சேர்க்கை விகிதம் என்று தனியாகப் பார்க்கின்றபொழுது, இந்திய அளவில் அது 22.7 சதவிகிதமாக இருந்தாலும்கூட, தமிழகத்தில் அது 42.7 சதவிகிதமாக இருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது, உயர் கல்வியில் சேருகின்றவர்களுடைய எண்ணிக்கையை சரியான முறையில் அனைத்து நிலைகளிலும் நிருவகித்து, மாணவர்கள் உயர் கல்வி பயில்வதற்கு பல்வேறு வகையான வழிவகைகளை செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.

திருமதி கு. உமா மகேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, உலக அளவில் கல்வித் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. விளாத்திகுளம் தொகுதியிலுள்ள, மகாகவி பாரதியார் பிறந்த பூமியான எட்டயபுரத்தில், புரட்சித் தலைவர் அவர்கள் பலநோக்குத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அமைத்து, சிறப்பு செய்தார்கள். தற்போது மாணவர்கள் கல்லூரி செல்ல வேண்டுமானால், தூத்துக்குடிக்கோ, கோவில்பட்டிக்கோ செல்ல வேண்டியுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பட்ட புண்ணிய பூமியான எட்டயபுரத்தில்,

2016 ஆகஸ்ட் 23]

கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றினை அமைத்துத் தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாணவர்களும் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, மாணவர்களுடைய சேர்க்கைக்குத் தகுந்தாற்போல், எந்தெந்த பகுதிகளில் கூடுதலாகக் கல்லூரிகள் தேவைப்படுகின்றனவோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் கல்லூரிகளைப் புதிதாக அமைத்துத் தருகிறது. புதிதாகக் கல்லூரிகள் அமைத்துத் தருகின்ற அதேநேரத்தில், மாணவர்களுடைய சேர்க்கைக்குத் தகுந்தாற்போல், ஒருசில மாவட்டங்களைப் பார்க்கின்றபோது, குறைவாக கல்லூரிகள் உள்ள பகுதிகளிலே, மாணவர்களுடைய சேர்க்கைக்குத் தகுந்தாற்போல், கூடுதலாக கல்லூரிகளை வழங்குகிற அரசாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது திகழ்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலே கூடுதலாக கல்லூரி தேவைப்படுகின்றபட்சத்தில், அதையும் வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது வரும் காலகட்டங்களில் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவர் சார்ந்திருக்கின்ற மாவட்டத்திலே 2 அரசுக் கல்லூரிகளும், 8 சுய நிதிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது, மாணவர்களுடைய சேர்க்கைக்கு ஏற்றாற்போல், தேவைப்படுகின்றபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.